

NSC

# சகிப்புத்தன்மைக்கும் சமாதான சகவாழ்வுக்குமான இஸ்லாமிய அடிப்படைகள்

# Islamic Concept and Basics for Tolerance and Coexistence

By: **Ash-Sheikh S.H.M. Faleel**

*(Senior Lecturer, Jamiah Naleemiah)*

National Shoora Council

# சகிப்புத்தன்மைக்கும் சமாதான சகவாழ்வுக்குமான இஸ்லாமிய அடிப்படைகள்

# Islamic Concept and Basics for Tolerance and Coexistence

## அறிமுகம்

**சகிப்புத்தன்மை** என்றால் "ஒருவர் தன்னை விட வித்தியாசமான கருத்துக்களை மற்றும் நடத்தைகளைக் கொண்டிருப்போரையும் மாற்று இனங்களை மதங்களை தேசங்களைச் சேர்ந்தோரையும் நியாயமாகவும் அறிவுபூர்வமாகவும் நடாத்தும் மனோபாவத்தைக் குறிக்கும். இதற்கு "**ஒருவர் தான் அங்கீகரிக்காத ஒரு விடயத்தை பிறர் மேற்கொள்வதற்கு அவர் அனுமதி வழங்குவதாகும்.**"(1) என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது. மேலும் ஒரு கருத்தின்படி, சகிப்புத்தன்மை என்றால் "குறிப்பிட்ட ஒரு விடயத்திற்கு ஒருவர் தனது அங்கீகாரத்தை வழங்காத நிலையில் அதனை சகித்துக் கொள்வதாகும்."(2)

**சமாதான சகவாழ்வு** என்றால் "வித்தியாசமான சித்தாத்தங்களைக் கொண்டுள்ள அரசுகள் அருகருகே சமாதானமாக இருப்பதாகும்"(3) என்று கூறலாம். அதாவது, எதிரும் புதிருமான போக்குகளையும் வித்தியாசமான கொள்கைகளையும் கொண்ட சமூகங்கள் அல்லது அரசுகள் தத்தமது தனித்துவங்களைப் பேணிய நிலையில் தமக்கிடையே மோதிக் கொள்ளாமல் பரஸ்பரம் சமாதானமாக அருகருகே வாழ்வதனை அல்லது இருப்பதனை சகவாழ்வு (Coexistance) எனும் பதம் குறிப்பதாகக் கொள்ளலாம்.

சகிப்புத்தன்மைக்கும் சகவாழ்வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. **சகவாழ்வுக்கான முதல் நிபந்தனை சகிப்புத்தன்மையாகும்.** சகவாழ்வு இருக்கும் இடத்தில் சகிப்புத்தன்மை நிச்சயமாக



இருக்கும். மனித வாழ்வின் அடிப்படை விழுமியங்களில் இவ்விரண்டும் அடங்கும். சமூக, அரசியல், பொருளாதார, மதவிவகாரங்கள் ஆகிய அனைத்து துறைகளுக்கும் இவை தேவைப்படுகின்றன. ஒருவர் விரிந்த உள்ளம் கொண்டவராக, நாகரிகமானவராக இருக்கிறார் என்பதற்கான அடையாளமாக இவற்றைக் கருதலாம்.

## இஸ்லாமிய நோக்கு

**சகிப்புத்தன்மை, சகவாழ்வு ஆகிய** இவ்விரு நற்குணங்களையும் இஸ்லாம் ஸ்தாபித்தது மட்டுமன்றி, அவற்றிற்கான **பலமான அடித்தளங்களையும் இட்டுள்ளது.** அந்தவகையில், பின்வரும் அம்சங்களை இங்கு குறிப்பிட முடியும்:-

### 1. பன்மைத்துவத்தை பிரபஞ்ச நியதியாக அங்கீகரிப்பது

சகிப்புத்தன்மைக்கும் சகவாழ்வுக்குமான இஸ்லாத்தின் முதலாவது அடிப்படையாக பன்மைத்துவம் பற்றிய அதன் கண்ணோட்டம் அமைகிறது. உலக இயக்கத்துக்கு பன்மைத்துவம் அவசியமென்றும் அது இறைவனது ஏற்பாடு அல்லது நியதி என்றும் இஸ்லாம் கருதுகிறது. பலவகையான படைப்புகளை அல்லாஹ் படைத்திருப்பது போல் அந்த ஒவ்வொரு படைப்புக்கு மத்தியிலும் நானாவித வித்தியாசங்களையும் ஏற்படுத்தியிருக்கிறான். அதாவது, படைப்புக்களுக்கு மத்தியில் மனிதர்கள் ஒரு சாராராக இருப்பது போலவே அவர்களுக்குள்ளும் பல வகையான நிறங்களைக் கொண்டவர்களும் பல்வேறுபட்ட மொழிகளைப் பேசுவோரும் உள்ளனர். அல்லாஹ் இந்த வித்தியாசங்களை ஒருவரை விட இன்னொருவரை சிறப்பாக்குவதற்காகவோ சண்டையிட்டுக் கொள்வதற்காகவோ ஏற்படுத்தவில்லை.

நிற மற்றும் மொழி வித்தியாசங்கள் இறைவன் இருக்கிறான் என்பதற்கான அத்தாட்சிகள் என்று கூறிய அல்லாஹ், அந்த

அத்தாட்சிகளைப் பற்றி அறிஞர்கள் சிந்தித்து படிப்பினை பெற வேண்டும் என்றும் பணிக்கிறான்.

“வானங்கள் பூமியின் படைப்பு அமைப்பும் உங்களது மொழிகளும் நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனைக் காட்டும் அத்தாட்சிகளைச் சேர்ந்தவையாகும். இதில் அறிவாளிகளுக்கு பல அத்தாட்சிகள் உள்ளன.” (30:22) என்கிறான்.

மனித சமூகத்துக்குள் கோத்திரங்களையும் இனங்களையும் அல்லாஹ் ஏற்படுத்தியிருப்பது ஒரு சாரார் மற்றைய சாராரைப் புரிந்து கொண்டு வாழ்வதற்காகும் என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

“மனிதர்களே, உங்களை நாம் ஒரே ஆணிலிருந்தும் ஒரே பெண்ணிலிருந்தும் படைத்து உங்களை இனங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கியிருப்பது ஒருவர் மற்றவரை பரஸ்பரம் புரிந்து கொள்வதற்காகும்.” (49:13) என அவன் குறிப்பிடுகின்றான்.

எனவே, நிறம், மொழி, இனம், குலம் என்பன இறைவன் இருக்கிறான் என்பதற்கான அடையாளங்களாகவும் ஒருவர் பிறரைப் புரிந்து கொண்டு வாழ்வதற்கான ஊடகங்களாகவும் அமைந்துள்ளதாக இஸ்லாம் கருதுகிறது. தோலின் நிறம் கறுப்பாக இருக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக புறக்கணிக்கப்பட்ட சமுதாயங்களுக்காகப் போராடிய மாட்டின் லூதரினதும் நெல்ஸன் மண்டேலாவினதும் போராட்டங்கள் தோன்றுவதற்கு இஸ்லாமிய நோக்கில் எவ்வித நியாயமுமில்லை. இலங்கையின் முப்பது வருட யுத்தத்துக்கு மொழியும் இனமும் தான் காரணமாக இருந்தால் இஸ்லாம் அதனை அங்கீகரிக்கப் போவதில்லை.

மத வித்தியாசமும் இறைவனின் விருப்பத்தின் பேரில் இடம் பெறுவதாகவே குர்ஆன் கூறுகிறது. **“உமது இறைவன் நாடியிருந்தால் உலகிலுள்ள அனைவரும் (முஸ்லிம்களாக) விசுவாசம் கொண்டிருப்பர். எனவே, அவர்கள் விசுவாசிகளாக**



**(முஸ்லிம்களாக) மாறுவதற்காக மக்களை நீர் நிர்ப்பந்திக்கிறீரா?”** (10:99) என அல்லாஹ் வினவுகிறான்.

அந்தவகையில் முஸ்லிம்கள் தமது மதத்தை தகுந்த ஆதாரங்களுடனும் இங்கிதமான அணுகுமுறைகளுடனும் பிறருக்குப் பிரசாரம் செய்தும் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையாயின் அவர்களை பலாத்காரப்படுத்தாமல் தமக்கு மத்தியில் வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும். அது இறை நியதி என்றும் அவர்கள் தொடர்பான தீர்ப்பை மறுமையில் அல்லாஹ் வழங்கப் போதுமானவன் என்றும் முஸ்லிம்கள் நினைத்துக் கொள்ள வேண்டும். இது மத ரீதியான பன்மைத்துவத்துக்கான இஸ்லாத்தின் அங்கீகாரத்தைக் காட்டுகிறது.

## 2. மார்க்கத்தில் பலாத்காரமில்லை

உலக சமுதாயங்கள் யுத்தங்களில் சம்பந்தப்பட்டமைக்கு மத வித்தியாசமும் மத வைராக்கியமும் பலாத்காரமும் மதசகிப்பின்மையும் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. ஆனால், இஸ்லாம் மத சகிப்புத்தன்மையையும் சுதந்திரத்தையும் வலியுறுத்துகிறது. பல்வேறுபட்ட மதங்களைச் சார்ந்தவர்கள் உலகில் இருக்கலாம் என அது ஏற்றுக் கொள்கிறது.

இஸ்லாமிய பிரசாரத்தில் ஈடுபடுவது முஸ்லிம்கள் மீதான கடமையாகும். இஸ்லாம் முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட மார்க்கமல்ல என்ற வகையிலும் அது சகலருக்குமான அருள் என்ற ரீதியிலும் அதனை அவர்கள் முஸ்லிமல்லாதோருக்கு எத்திவைப்பார்கள். அதற்காக ஆதாரங்களைத் துணையாகக் கொள்வதுடன் மிகவும் சிறந்த-உன்னதமான வழிமுறைகளை மட்டுமே இதற்காக அவர்கள் கையாள வேண்டும் என அல்லாஹ் அவர்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

“உமது இரட்சகனின் பாதையின் பால் ஞானத்துடனும் அழகிய உபதேசத்துடன் அழைப்பு விடுப்பீராக. அவர்களுடன் மிகவுமே

அழகிய வழிமுறைகள் மூலமாகவே கருத்துப் பரிமாறல் செய்வீராக!" (16:125) என அல்லாஹ் கூறுகின்றான்.

இப்படி சிறப்பான வழிமுறைகள் மூலம் இஸ்லாம் எத்திவைக்கப்பட்டும் கூட முஸ்லிம் அல்லாதோர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லையாயின், அது அவர்களது சொந்த விருப்பமாக கருதப்பட்டு அவர்கள் மத நல்லிணக்கத்தோடு நடாத்தப்படுவார்கள். அவர்கள் இஸ்லாமிய அரசில் "திம்மீக்கள்" (பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்) என்ற நாமத்துடன் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்டு சுதந்திரமாக தமது வழிபாடுகளில் ஈடுபட அனுமதி வழங்கப்படும். இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அவர்கள் எதிர்த்து ஆயுதமேந்திப் போராடத் துணியும் பட்சத்தில் மட்டுமே அவர்களுக்கெதிராக ஆயுதப் போராட்டம் தற்காப்பு நிமித்தம் தொடுக்கப்படும். **"மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை"** (2:256) "மக்கள் விசுவாசிகளாக மாற நீர் அவர்களை நிர்ப்பந்திக்கிறீரா?" (10:99), "அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவராக நீர் இல்லை" (88:22) போன்ற குர்ஆனிய வசனங்கள் இஸ்லாத்தின் மத சகிப்புக்கான சான்றுகளாகும்.

## 3. பிற சமய, கலாசார, நாகரிகங்களை மதிப்பது

பிற சமயங்களையும் கொள்கைகளையும் இஸ்லாம் சரி காணாத போதிலும் அவற்றுக்குரியவர்கள் இஸ்லாமிய வட்டத்துக்குள் வரவிரும்பாதபோது அவர்களையோ அவர்களது நம்பிக்கைக ளையோ நடத்தைகளையோ முஸ்லிம்கள் தூஷிப்பதையும் அவமதிப்ப தையும் விரும்பவில்லை. இது இஸ்லாத்தின் சகிப்புக்கும் சமாதான சகவாழ்வுக்குமான பிறிதோர் அடிப்படையாகும்.

**"அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களை (வணங்குபவர் களை) நீங்கள் ஏச வேண்டாம். அவ்வாறு நீங்கள் செய்தால் அவர்கள் பதிலுக்கு அத்துமீறி எவ்வித அறிவுமின்றி அல்லாஹ்வை ஏசவார்கள்"** (6:108) எனக் கூறுகிறான்.



இஸ்லாத்தைப் பின்பற்றுவோர் தாம் பிறரால் மதிக்கப்பட வேண்டும் என்றும் தூஷிக்கப்படக் கூடாது என்றும் விரும்பினால் அவர்கள் பிற சமயத்தவர்களையோ அவர்கள் வணங்கும் தெய்வங்களையோ தூஷிக்காமல் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மதப்பிரசாரமும், மதக் கலந்துரையாடல்களும், மத ஒப்பீட்டாய்வும் நடக்கக்கூடாது என்பதல்ல. ஆனால், அறிவுபூர்வமாகவும் பிறரது மன உணர்வுகளைப் புண்படுத்தாத விதத்திலும் நளினமாகவும் அது அமைதல் வேண்டும். **"வேதம் கொடுக்கப்பட்டவர்களுடன் மிக அழகிய வழிமுறையில் அன்றி தர்க்கம் புரிய வேண்டாம்."** (29:46) என அல்லாஹ் பணிப்புரை விடுக்கிறான்.

யுத்தங்கள் நடைபெறும்போது பிறமத ஆலயங்கள் உடைக்கப்படக்கூடாது என்றும் மதத் தலைவர்கள் கொல்லப்படக்கூடாது என்றும் முஸ்லிம் கலீபாக்கள் படைகளுக்குக் கட்டளையிட்டார்கள். மதீனா சாசனத்தில் "யூதர்களுக்கு அவர்களது மார்க்கம் முஸ்லிம்களுக்கு அவர்களது மார்க்கம்" என குறிப்பிடப்பட்டிருந்தது. பிற சமய நம்பிக்கைகளும், வழிபாடுகளும் பிழையானவை என முஸ்லிம்கள் உறுதியாக நம்பியிருந்தும் இந்த மத சகிப்புத்தன்மையை கடைப்பிடித்தனர். அவர்கள் ஸ்பெயின், இந்தியா போன்ற நாடுகளைக் கைப்பற்றியபோதிலும் இன்று வரை அங்கு பிறமத ஆலயங்கள் இருப்பது இதற்கான சான்றுகளாகும்.

## 4. மனிதன் என்ற பொதுத்தளம்

முதன் முதலில் மனிதர்களை அவர்களது நிறம், குலம், மொழி, மதம் போன்ற அடிப்படைகளில் வைத்து நோக்காமல் அனைவரையும் மனிதர்கள் என்ற பொதுத்தன்மையை வைத்தே நோக்க வேண்டும் என இஸ்லாம் கற்றுத் தருகிறது. மனிதர்கள் – அவர்கள் எந்த பின்னணிகளையும், கொள்கைகளையும் கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் ஆதம்–ஹவ்வா தம்பதிகளிலிருந்துதான் வந்திருக்கிறார்கள்.

அப்படியாயின் அவர்கள் ஒரே பெற்றோரின் பிள்ளைகள்தான். **"மனிதர்களே! உங்களை ஓர் ஆத்மாவிலிருந்து படைத்து, அதிலிருந்து அதன் சோடியைப் படைத்து, அவ்விருவரிலிருந்து அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவலாக உண்டு பண்ணிய அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்."** (4:1) என அல்லாஹ் கூறுவதிலிருந்து பிற சமயத்தவர்களாயினும் அவர்களை ஒரு முஸ்லிம் தனது சகோதரர்களாகப் பார்க்க வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

தற்கால உலகில் ஜீவகாருண்யம் என்ற பெயரில் மிருகங்களை அரவணைத்து மனிதர்களை அவர்களது வித்தியாசமான மதங்களுக்காகப் புறந்தள்ளி வைப்பது அற்புதமாக இருக்கிறது. ஆனால், அனைவரும் ஒரே இறைவனின் படைப்புக்கள் என்ற நிலையை விடவும் ஒரு படி மேல் சென்று அனைவரும் மனிதர்கள் என்ற சகோதரத்துவ வாஞ்சையால் கட்டுண்டால் அன்பும் இரக்கமும் பரஸ்பர ஒத்துழைப்பும் நிலவும். அனைவருடைய உடல் அமைப்பும் ஒன்றாக இருக்கிறது. சிவப்பு இரத்தமே எல்லோரது உடலில் ஓடுகிறது. அனைவருக்கும் அடிப்படையான மனித தேவைகளே உள்ளன. அப்படியாயின் மனித சகோதரத்துவம் யாவரையும் பிணைப்பது அவசியமாகும்.

நபி(ஸல்) அவர்களை கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த யூத சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரது பிரேதம் எடுத்துச் செல்லப்பட்ட போது அவர்கள் மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். அப்போது "அதுவும் ஒரு ஆத்மா அல்லவா?" என அவர்கள் கேள்வி எழுப்பி தனது செயலுக்கு நியாயம் கற்பித்தார்கள்.

## 5. யாவருக்கும் பொதுவாக நீதி செலுத்தப்பட வேண்டும்

மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமனாக நடாத்தப்பட வேண்டும். அதில் முஸ்லிம்-முஸ்லிம் அல்லாதவர்கள், நண்பன்-பகைவன், உறவினன்-அல்லாதவன் போன்ற வித்தியாசங்கள் பார்க்கப்படக் கூடாது என்பதில் இஸ்லாம் மிக உறுதியாக



இருக்கிறது. சமாதான சகவாழ்வு பாதிக்கப்படுவதற்கு பாரபட்சம், அநீதி, ஓரவஞ்சனை என்பன மிகப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளதை உலக வரலாறு நிரூபிக்கின்றது. வேற்று மொழி யொன்றைப் பேசுவோர் என்பதற்காக பாரபட்சம் காட்டப்பட்டமை யால் யுத்தங்கள் கூட நடந்துள்ளன.

எனவே, நண்பன் தவறு செய்து எதிரியின் பக்கத்தில் நியாயமிருந்தால் அங்கு நற்புக்கு அன்றி நீதிக்கே நாம் மதிப்பளிக்க வேண்டும். இதனை குர்ஆனில் **"நம்பிக்கை கொண்டோர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுபவர் களாக (உண்மையின் மீது) நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள். ஒரு கூட்டத்தார் மீது (நீங்கள் கொண்டு)ள்ள பகைமையானது நீதி செலுத்தாதிருக்க ஒருபோதும் உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறைபக்திக்கு மிகவுமே நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கிறான்"** (5:8) எனக் கூறுகிறான்.

மேலும் ஓர் இடத்தில், **நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர் களாக இருங்கள். (அந்த சாட்சியானது) உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினர் களுக்கோ விரோதமாக இருப்பினும் சரியே. (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகின்றீர்களோ) அவர் செல்வந்தராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அல்லாஹ் அவ்விருவருக்கும் (நீதி பெற்றுக்கொடுக்க) மிகப் பொருத்தமானவனாவான். நியாயம் வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். சாட்சியத்தை பிழையாகக் கூறினாலோ அல்லது (சாட்சி கூறுவதிலிருந்து) விலகிவிட்டாலோ நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள் இவ்வாறு எதனைச் செய்தாலும்) நீங்கள் செய்வதையெல்லாம் நன்கறிந்தவனாக இருக்கின்றான்."** (4:135) எனக் கூறுகிறான்.

எனவே, நற்பு, உறவு, பணபலம், அதிகார பலம் போன்ற காரணிகளால் மனித சமுதாயத்தில் அநீதி பிரயோகிக்கப்படலாகாது என்பது இஸ்லாம் வலியுறுத்தும் கருத்தாகும்.

அல்குர்ஆனின்(4:105) எனும் வசனம் நபி(ஸல்) அவர்களது ஒரு பிழையான அனுமானத்தை திருத்திக் கொடுப்பதற்காக இறக்கப் பட்டதாகும். ஒரு திருட்டுச் சம்பவத்தில் ஒரு முஸ்லிம் சம்பந்தப் பட்டிருந்தார். ஆனால், அவர் அப்படி செய்திருக்கமாட்டார் என்று நபி(ஸல்) அவர்கள் உறுதியாக நம்பினார்கள். காரணம், திருட்டில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டவர் இஸ்லாத்தை எதிர்த்து வந்த நயவஞ்சகர்களில் ஒருவராவார். ஆனால், அல்லாஹ் “நீர் மக்களுக்கு மத்தியில் உமக்குக் காட்டித்தந்தபடி தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக உமக்கு வேதத்தை இறக்கினேன். நீர் மோசடிக்காரர்களுக்காக வாதிடுபவர்களில் ஒருவராக இருக்கா தீர்” (4:105) எனக் கூறினான்.

கலீபா அலி(றழி) அவர்களது கேடயத்தை முஸ்லிம் அல்லாத ஒருவர் திருடியபோது அது தன்னுடையது தான் என நிரூபிப்பதற் கான சான்றுகளை முன்வைக்க முடியாத அவர்கள் நீதி மன்றத்தி லிருந்து தனக்குப் பாதகமான தீர்ப்பைப் பெற்றுக் கொண்டு திரும்பியவேளை அந்தப் பிரதிவாதி இஸ்லாத்தை ஏற்ற சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில் பிரபலமானது.

எனவே, இஸ்லாத்தின் நீதிக் கோட்பாடு சமாதான சகவாழ்வுக் கான மற்றுமொரு பிரதான அடித்தளமாக அமைகிறது.

## 6. மனிதாபிமான உதவிகள்

ஒரு முஸ்லிமை தன் கொள்கை சாராதவர்களுடன் பிணைக்கும் பிரதான பலமாக அமைவது மனிதாபிமான உதவிகளும் ஒத்தாசை களுமாகும். மத வித்தியாசமானது முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இத்தகைய உதவிகளைச் செய்ய முஸ்லிமுக்கு ஒரு போதும் தடையாக இருக்கவில்லை. அல்குர்ஆன் மனித சமுதாயத்தைச்



சேர்ந்த அனைவரையும் மனிதாபிமான அடிப்படையிலேயே நோக்கும்படியும் நடாத்தும்படியும் பணிக்கிறது. வறுமை, நோய், அறிவீனம் போன்ற கஷ்டங்களில் சிக்கித் தவிக்கும் எவருக்கும் முஸ்லிம்கள் உதவிகளைச் செய்வது கடமையும் இறைவனிடம் நன்மையைப் பெற்றுத்தரும் கைங்கரியமுமாகும்.

அந்த முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடுதல் முஸ்லிம் – போன்ற தொந்தரவுகளைத் தராதவர்களாக, முஸ்லிம்களுடன் சகவாழ்வை மேற்கொள்வதற்கு விருப்பமானவர்களாக இருந்தால் இந்த மனிதாபிமான உதவிகள் கடமைகளாக மாறிவிடுகின்றன. இதனை அல்லாஹ், **“மார்க்க விடயத்துக்காக உங்களுக்கெதிராக போராடாமலும் உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருப்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செலுத்து வதையும் விட்டு உங்களை அல்லாஹ் தடுக்கமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கிறான்.”** (60:8) எனக் கூறுகிறான்.

இந்த குர்ஆன் வசனத்தின்படி பார்க்கையில் தற்கால உலகிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் அல்லாதவர்களுடன் முஸ்லிம்கள் சமாதான சகவாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கும் அப்பால் அவர்களுக்கு தம்மாலான சகலவிதமான உதவி ஒத்தாசைகளை யும் செய்து அவர்களுடன் பாரபட்சம் காட்டாது நீதி, நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.

முஸ்லிம்கள் தமது இஸ்லாத்தைப் பின்பற்றுவதற்கு இந்த முஸ்லிம் அல்லாதோர் அனுமதியளித்து அவர்களை சகித்து, சகவாழ்வை மேற்கொள்வதாயின் எந்தவித தங்கு தடையுமின்றி இவ்விரு பணிகளிலும் முஸ்லிம்கள் ஈடுபட வேண்டும்.

## 7. சகவாழ்வின் நடைமுறைகள்

இஸ்லாத்தின் சகிப்புத்தன்மையானது இஸ்லாமிய வரலாற்றில் சகவாழ்வாகப் பரிணமித்திருக்கின்றது. பிறசமுதாயத்தவர்கள் தமக்கு அருகில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் அங்கீகாரம் வழங்கியது மட்டுமன்றி அவர்களுடன் சகல விதமான சமூக உறவுகளையும் பேணி வந்திருக்கிறார்கள். மத வித்தியாசம் இதற்குத் தடையாக இருக்கவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் தொடுக்காத, சமாதானமாக வாழ விரும்பிய பிறசமுதாயங்களை முஸ்லிம்கள் சகவாழ்வுக்காக உள்வாங்கியிருந்தமை வரலாற்றில் அவதானிக்கப் பட்டிருக்கிறது. அதற்காக பின்வரும் உதாரணங்களைத் தர முடியும்:-

**அ.** முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில் முஸ்லிம் அல்லாதவர்களும் திம்மீக்கள் (முஸ்லிம்களது பாதுகாப்பைப் பெற்றவர்கள்) என்ற பெயரில் வாழுவதற்கும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டார்கள். மதீனா சாசனத்தின் பல உறுப்புரைகளில் அவர்களுக்கான மத, கலாசார, சமூக உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாமிய ஆட்சி நிலவிய எல்லா நாடுகளிலும் இந்த திம்மீக்கள் இருந்திருக்கிறார்கள்.

**ஆ.** முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்குமிடையில் ஹுதைபியா என்ற வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உடன்படிக்கை செய்யப்பட்டு இரு சாராரும் யுத்தத்தைத் தவிர்த்து சுதந்திரமாக நடமாட வழியேற்பட்டது.

**இ.** மதீனாவில் முஸ்லிம் அல்லாத யூத, கிறிஸ்தவர்களும் பல தெய்வ வணங்கிகளும் கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டனர்.

**ஈ.** நபி(ஸல்) அவர்களும் அன்னாரது தோழர்களும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வறுமை, நோய், இறப்பு போன்ற துன்பங்கள் சம்பவித்தபோது மனிதாபிமான உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.



**உ.** முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையில் இருந்த இரத்த மற்றும் பந்த உறவுகளைப் பேண எந்தத் தடையும் இருக்கவில்லை.

**ஊ.** முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து அன்பளிப்புக் களைப் பெற்றதுடன் பதிலாக அன்பளிப்புக்களை வழங்கியமைக் கான பல சான்றுகள் உள்ளன.

**எ.** முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பல உயர்மட்ட சந்திப்புக்கள் இடம்பெற்றன. உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன. ஹிஜ்ரி 9ஆம் வருடம் தூதுக் குழுக்களது வருடம் எனக் கூறப்படுமளவுக்கு அயல் நாடுகளில் வசித்து வந்த பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களும் மதீனாவுக்கு வந்து நபி(ஸல்) அவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார்கள். நஜ்ரான் பிரதேசத்திலிருந்து வந்த கிறிஸ்தவ தூதுக் குழு நபி(ஸல்) அவர்களையும் முஸ்லிம்களையும் நபிகளாரின் மஸ்ஜிதுன் நபவியில் சந்தித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏ. எல்லோருக்கும் பொதுவான சமூக விவகாரங்களில் முஸ்லிம்கள் பிற சமயத்தவர்களுடன் பங்கெடுத்தார்கள். அவ்வாறு எங்கெடுக்க வேண்டுமென அல்குர்ஆன் பொதுவாகக் கட்டளை பிறப்பிக்கின் றது. "நற்காரியங்கள் மற்றும் இறைபக்தி விடயத்தில் ஒருவருக் கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுங்கள்" (5:2) என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். அந்தவகையில்தான் நபி(ஸல்) அவர்கள் இளைஞராக இருந்தபோது தனது பெரிய தந்தை அபூதாலிபுடன் சென்று 'ஹில்புல் புளுல்' எனும் அநீதியை ஒழிப்பதற்காக குறைஷித் தலைவர்கள் ஏற்படுத்தியிருந்த சங்கத்தில் அங்கம் வகித்தார்கள்.

எனவே, இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர் களுக்கெதிராக மிகவுமே விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தான் யுத்தம் தொடுத்தார்கள். ஆனால், முஸ்லிம்களது உரிமைகளை முற்றாக மறுத்து அவர்களுக்கெதிராக ஆயுதம் தூக்கி, அவர்களது

வாழ்விடங்களிலிருந்து அவர்களை வெளியேற்றி, அப்பட்டமான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர்களை முஸ்லிம்கள் சகிக்கவில்லை. அவ்வாறு சகிப்பது அநியாயம் என்றும் எதிர்த்துப் போராடுவது கடமை என்றும் இஸ்லாம் கூறியது. ஸாகிர் நாயிக் கூறுவது போல், "இஸ்லாம் அநீதியோடும் அடக்க முறையோடும் நல்லிணக்கத்தையோ சகவாழ்வையோ பேணமாட்டாது. அது எப்போதும் அன்பு, இரக்கம், நீதி என்பவற்றுடன் தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். இதனால்தான் இஸ்லாத்தில் நல்லிணக்கம் இல்லை என சிலர் கூற முற்படுகின்றார்கள்." (4)

எனவே, தற்காப்புக்காகவும் அடக்கு முறைக்கு எதிராகவும் இஸ்லாம் போராடினாலும் அடிப்படையில் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதோர் உறவு, பரஸ்பர புரிந்துணர்வு, சமாதானம், பரஸ்பர ஒத்துழைப்பு என்பவற்றின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.

## 8. கரைந்து விடாமல் கலந்து வாழ்வது

முஸ்லிம்கள்-முஸ்லிம்கள் அல்லாதவர்களுடன் சமாதான சக வாழ்வை மேற்கொண்டாலும் தமது தனித்துவங்களை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் ஆணித்தரமான கட்டளையாகும். ஒரு முஸ்லிமை முஸ்லிம் அல்லாதவரிடமிருந்து பிரித்துக் காட்டும் பல வித்தியாசங்கள் உள்ளன. அவை நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், நடைமுறை வாழ்வுடன் தொடர்பான சட்டவிதிகள், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றில் காணப்படுகின்றன. சகவாழ்வு என்ற பெயரில் இவற்றை விட்டுக் கொடுக்கவோ, தாரை வார்க்கவோ முஸ்லிமுக்கு அனுமதியில்லை. உதாரணமாக, சிலைகளை வணங்குவது, முஸ்லிம் பெண்கள் பிற ஆடவர் முன்னால் ஹிஜாபை அணியாது விடுவது, ஷரீஅத் கூறிய முறையில் அல்லாமல் அறுக்கப்பட்ட மிருகங்களது மாமிசங்களைப் புசிப்பது போன்ற காரியங்களை பிற சமயத்தவரைத் திருப்திப்படுத்துவதற்காக சகவாழ்வு என்ற பெயரில் ஒரு முஸ்லிம் செய்யலாகாது.



எனவே, முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து முற்று முழுதாக ஒதுங்கியிருப்பது, அவர்களுடன் இரண்டறக் கலந்து தனித்துவங் களையும் கூட இழந்துவிடுவது ஆகிய இரு துருவ நிலைகளில் ஏதாவது ஒன்றில் நிற்காமல் நடுநிலையில் நிற்கும்படியே இஸ்லாம் போதிக்கிறது. அதாவது, ***கரைந்துவிடாமல் கலந்து வாழுவது*** என்பது இதன் பொருளாகும்.

## 9. மீள் நல்லிணக்க வழிகள்

துரதிஷ்டவசமாக இருசாராருக்கிடையில் மோதல்கள் நடந்து முடிந்துவிட்டதாக வைத்துக் கொண்டால் அவ்விரு சாராருக்கும் இடையில் நிலவும் பகைமையை நீக்கி மீள் நல்லிணக்கத்தின் பால் கொண்டு வருவதற்கான திட்டங்களையும் இஸ்லாமியப் போதனை களில் காண முடியும். அந்தவகையில், சமூகவியலாளர்கள் மீளிணக்கத்தை (Reconciliation) அடைய கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை நீதியாக அணுகுவது, அவ்வாறு அணுகும்போது ஒரு தரப்பு தவறில் ஈடுபட்டிருப்பதாக நிரூபனமானால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பை வேண்டுவது, இழப்புகள் நேர்ந்திருந்தால் நஷ்டயீடு வழங்குவது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடுகள் பற்றி இஸ்லாமும் சிலாகித்துக் கூறியுள்ளது.

அந்தவகையில், மோதலில் சம்பந்தப்பட்ட ஒரு சாராரது பக்கத்தில் தவறு நடந்திருப்பின் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நீதிக் கோட்பாடு இஸ்லாத்தில் உள்ளது என ஏற்கனவே விளக்கப் பட்டது. தவறு செய்தவர் பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்புக் கேட்பது சம்பந்தமாகவும் நஷ்டயீடு வழங்குவது தொடர்பாகவும் நபி(ஸல்) அவர்கள் முக்கியத்துவமளித்துக் கூறியுள்ளார்கள். "உன்னைத் துண்டித்து நடப்பவர்களுடன் நீ உறவைப் பேணுவீராக! உனக்குத் தராமல் தடுத்துக் கொள்பவருக்கு நீ கொடுப்பாயாக. உனக்கு அநீதியிழைத்தவரை நீ மன்னிப்பாயாக" (அஹ்மத் 4:158) எனக் கூறினார்கள். நல்லடியார்களது விஷேடமான பண்புகள் பற்றி

அல்லாஹ் கூறும்போது: “(அவர்கள்) தம்மீது அத்துமீறல் செய்யப் பட்டால் பழிவாங்குவார்கள். தீமைக்கான பரிசு தீமைதான். ஆனால் (அவ்வாறு பழி வாங்காது) மன்னித்து யார் (தனது எதிரியுடன்) சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விட முள்ளது. நிச்சயமாக அவன் அநியாயம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்.” (42:40). பக்திமிக்க நல்லடியார்கள் “மக்களை மன்னிப்ப வர்களாக இருப்பர்” (3:134) என்கிறான். நபி(ஸல்) அவர்கள் “அநியாயத்துக்கு உள்ளாக்கப்பட்டவனது பிரார்த்தனையைப் பயந்து கொள்ளுங்கள். அவன் நிராகரிப்பாளனாக இருந்தாலும் பரவா யில்லை. ஏனெனில், அந்த பிரார்த்தனைக்கு எந்தத் திரையும் கிடையாது” (அஹ்மத், தபரானி) என்றார்கள்.

“ஒருவர் தனது சகோதரர் ஒருவரது மானம் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மீது அத்துமீறி, அநியாயமிழைத்திருப்பின் தீனார், திர்ஹம் இல்லாத ஒரு நாள் வருமுன் அதிலிருந்து விடுதலையாகிக் கொள்ளட்டும்.” (புகாரி, கிதாபுல் மழாலிம் 2314) என்று நபி(ஸல்) அவர்கள் மன்னிப்பையும் நஷ்டயீட்டையும் வலியுறுத்தினார்கள். ஆகவே, மீள் இணக்கப்பாட்டுக்கு வர இவை அவசியமானவை என்று இஸ்லாமும் கூறியுள்ளது.

சுருங்கக் கூறினால், இஸ்லாம் சகிப்புத்தன்மையையும் சமாதான சகவாழ்வையும் வலியுறுத்தும் மார்க்கமாகும். அதற்குத் தேவையான சகல அடிப்படைகளையும் அது தன்னகத்தே கொண்டிருக்கிறது. மிகவுமே நிர்ப்பந்தமான, விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அது யுத்தத்தை அங்கீகரித்தாலும் அடிப்படையில் அது இனங்களுக் கிடையில் பரஸ்பர மதிப்பு, புரிந்துணர்வு, ஒத்துழைப்பு என்பவற்றை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றிற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டு வரலாற்றில் அது அமுலாக்கப்பட்டது. ஆனால், முஸ்லிம்கள் ஒருபோதும் தமது மத, கலாசார, பண்பாட்டு தனித்துவங்களை இழந்து அவற்றை விட்டுக் கொடுத்து சகவாழ்வைப் பேண அனுமதிக்கப்படமாட்டார்கள். தமது தனித்துவங்களைப் பேணிய நிலையில், பிற சமயத்தவர்களுக்கான சகலவிதமான உரிமைகளை



யும் கொடுத்து, சகல இன, மதக் குழுமங்களையும் உள்ளடக்கிய மனிதாபிமான அடிப்படைகளில் அமைந்த ஓர் உலகையே அவர்கள் வரலாற்றில் கட்டியெழுப்பினார்கள்.

இந்தியாவிலும் ஸ்பெயினிலும் முஸ்லிம்கள் அமைத்த ஆட்சி பல்லின சமுதாயங்களுக்கான தொட்டிலாக அமைந்திருந்தது. உமையா, அப்பாஸியர்களது காலங்களில் பிற சமயத்தவர்கள் ஆட்சி, கல்வி, சமூக முன்னேற்றம், பொருளாதாரம் போன்ற துறைகளில் முஸ்லிம் களோடு தோளோடு தோள் நின்று உழைத்திருக்கிறார்கள். எனவே, சமாதான சகவாழ்வினூடாக மனித இனத்தின் சுபீட்சத்தை அடைவதே இஸ்லாத்தின் குறிக்கோளாகும்.




(1) Jess, Stein, The Random House Dictionary of English Language P 1382
(2) Encylopaedia Americana 26/674
(3) The Readers' Digest Great Encyclopaedia Dictionary 1/182
(4) Zakir Naik, Tolerance Towards Non-Muslims Haj & Umra (Magazine) Nov : 2003, P31